**செய்தி வெளியீடு எண்: 033** **நாள்: 10.01.2018**

**செய்தி வெளியீடு**

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2018–ன் இறுதி வாக்காளர் பட்டியல்கள் இன்று (10.01.2018) வெளியிடப்பட்டுள்ளன.

01.01.2018–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 03.10.2017 அன்று வரைவுப் பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/நீக்க/திருத்த/இடம் மாற்றம் செய்ய விண்ணப்பங்கள் 03.10.2017–ஆம் தேதியிலிருந்து 15.12.2017–ஆம் தேதிவரை பெறப்பட்டன.

மேற்கண்ட சிறப்பு சுருக்கமுறை திருத்த காலத்தின்போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்காக 6,16,741 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 5,88,396 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு பெயர்கள் சேர்க்கப்பட்டன. இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டைப் பதிவு ஆகியவற்றின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட நீக்கல்கள் 14,91,857 ஆகும். பதிவுகளில் திருத்தங்கள் செய்யக்கோரி 1,96,656 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 1,60,713 ஏற்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொகுதிக்குள்ளேயே முகவரி மாற்றம் செய்யக்கோரி 66,953 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 61,410 ஏற்கப்பட்டு முகவரி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

2018–ஆம் ஆண்டு சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தின் இறுதி வாக்காளர் பட்டியலின்படி தமிழ்நாட்டில் தற்போது 5.86 கோடி வாக்காளர்கள் (ஆண் வாக்காளர்கள் – 2.90 கோடி, பெண் வாக்காளர்கள் – 2.96 கோடி மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 5197 பேர்) பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இறுதி வாக்காளர் பட்டியல்களின்படி, தமிழ்நாட்டிலேயே அதிக அளவு வாக்காளர்கள் கொண்ட சட்டமன்றத் தொகுதி காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள 27.சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியாகும். இத்தொகுதியில் மொத்தம் 6,24,365 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 3,13,818 பெண்கள் 3,10,471 மூன்றாம் பாலினத்தவர் 76 ).

18–19 வயதுடைய இளைய வாக்காளர்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட தொகுதியாக 229–கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி உள்ளது. இங்கு 7,133 இளைய வாக்காளர்கள் உள்ளனர் (ஆண்கள் 3,913, பெண்கள் 3,219, மூன்றாம் பாலினத்தவர் 1).

தமிழ்நாட்டிலேயே குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட சட்டமன்றத் தொகுதி சென்னை மாவட்டத்திலுள்ள 18–துறைமுகம் சட்டமன்றத் தொகுதியாகும். இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,65,610 ஆவர். (ஆண்கள் 86,641, பெண்கள் 78,921, மூன்றாம் பாலினத்தவர் 48).

வெளிநாடுவாழ் வாக்காளர்கள் 407 பேரின் பெயர்களும் வாக்காளர் பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல்களை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான http://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம்.

வாக்காளர் பட்டியல் தொடர் திருத்த நடைமுறை தற்போது செயல்பாட்டிலுள்ளது. தகுதியுள்ள எவரும் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாமலிருந்தால், பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம். தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளத்தின் மூலமாக இணைய வழியில் விண்ணப்பிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**